# Have some leads on the cause of Theni forest fire: Atulya Misra

## Details to be disclosed in the report to State government

STAFF REPORTER
ERODE

The State-appointed Enquiry Officer for the Kurangani forest fire tragedy, Atulya Misra, on Wednesday said he had obtained information on the cause of the fire, adding that the details would be disclosed in the report to be submitted to the State government in two months' time.

Addressing mediapersons before commencing the third phase of the inquiry, Mr. Misra said that as per the Terms of Reference, the enquiry officer had to determine how the incident took place, the procedures followed in obtaining permission for trekking, any lapses on the part of the Forest department and any mistakes on the part of the trekking organisers, besides making recommendations to prevent such incidents from recurring.

When asked how the fire occurred and whether it was caused due to farmers burning the grass, he said there were four key factors to consider in case of a fire breakout: heat, oxygen, spark and fuel. "If there were fuel, wind and oxygen on the spot, we have to find out where the spark came from," he said and refused to reveal any more details.



Atulya Misra

**So far, we have spoken to 72 persons, including survivors, family members of the victims and the general public**

Mr. Misra said he had visited the Otha Maram spot on March 21 and the trekking route on Kozhukkumalai, the Top Station and the Central Station on March 22. "So far, we have spoken to 72 persons, including survivors, family members of the victims, members of the Eco Tourism Management Committee and the general public," he added.

### 'Spoken to survivors'

The officer said he had spoken to two survivors in Chennai on April 2 and had held discussions with experts, wildlife wardens and mediapersons.

To a query on the founder of the Chennai Trekking Club moving the Madurai Bench of the Madras High Court, seeking anticipatory bail, he said anybody could seek legal redress, and that his mission was executive in nature.

# குரங்கணி தீ விபத்து அறிக்கை இரண்டு மாதத்தில் தாக்கல்

## வருவாய்த்துறை அரசு முதன்மை செயலர் தகவல்



குரங்கணிகாட்டு தீவிபத்து குறித்து பாதிக்கப்பட்டவர்களிடம் நேற்று ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் வருவாய்த்துறை முதன்மை செயலாளர் அதுல்யமிஸ்ரா விசாரணை நடத்தினார். உடன் கலெக்டர் பிரபாகர், எஸ்.பி.சிவக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

ஈரோடு, ஏப். 5: தேனி மாவட்டம் குரங்கணி காட்டுத்தீ விபத்து தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட்டு அதுதொடர்பான அறிக்கை 2 மாதத்தில் தாக்கல் செய்யப்படும் என வருவாய்த்துறை அரசு முதன்மை செயலர் அதுல்ய மிஸ்ரா நேற்று ஈரோட்டில் தெரிவித்தார்.

தேனி மாவட்டம் குரங்கணியில் கடந்த மாதம் ஏற்பட்ட காட்டுத்தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தீ விபத்து குறித்து விசாரணை நடத்த வருவாய்த்துறை அரசு முதன்மை செயலர் அதுல்யமிஸ்ரா தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் நேற்று ஈரோட்டில் விசாரணை மேற்கொண்டனர். தீ விபத்து குறித்து தகவல் தெரிவிக்க விரும்பும் பொதுமக்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று வருவாய்த்துறை அரசு முதன்மை செயலாளர் அதுல்ய மிஸ்ரா ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் வைத்து குரங்கணி தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடமும் விசாரணை மேற்கொண்டார்.

முன்னதாக அதுல்ய மிஸ்ரா நிருபர்களிடம் கூறியதாவது: தேனி மாவட்டம் குரங்கணியில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தீ விபத்து குறித்து கடந்த 22ம்தேதி விசாரணையை துவங்கினோம். இதுவரை மலைப்பகுதியில் வாழும் குடும்பங்கள், பொதுமக்கள் என 72 பேரிடம் தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்று விபத்து குறித்து ஆய்வு செய்தோம். மேலும் அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள், வனத்துறையினர், உயிர் தப்பியவர்கள், காயமடைந்தவர்கள், டிரக்கிங் ஏற்பாடு செய்தவர்கள் என அனைவரிடமும் விசாரணை நடத்தவுள்ளோம். தீ விபத்து அதிக வெப்பத்தினால் ஏற்பட்டதா, ஆக்சிஜன் பற்றாக்குறையால் ஏற்பட்டதா, உராய்வினால் ஏற்பட்டதா என்பது குறித்து விசாரிக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் அதிகம் பேர் இந்த தீ விபத்தில் இறந்துள்ளனர். இறந்து போனவர்களின் உறவினர்களிடமும் விசாரணை நடத்தப்படுகிறது. தீக்குள் எப்படி சிக்கினார்கள், தீ வைக்கப்பட்டதா என்பது குறித்தும் விசாரிக்கப்படும்.

மேலும் டிரக்கிங் சென்றவர்கள் அனுமதி பெற்றுதான் சென்றார்களா? என்பது தொடர்பாகவும் விசாரணை நடத்தப்படும். டிரக்கிங் அழைத்து சென்ற பிரபு என்பவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு அதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. நாங்கள் குரங்கணி தீ விபத்து தொடர்பான விசாரணையை 2 மாதகாலத்திற்குள் முடித்து அரசிடம் தாக்கல் செய்வோம். வருங்காலங்களில் இதுபோன்ற தீவிபத்து நடக்காமல் இருக்க எவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடு எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும், தீ விபத்து நடக்காத வகையில் இருக்கவும் இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் பிரபாகர், தலைமை வன பாதுகாவலர் உதயன், வன பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் அன்வர்தின், மாவட்ட எஸ்.பி.சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, உதவி கலெக்டர் (பயிற்சி) விசுமகாஜன், மாவட்ட வன அலுவலர்கள் ஆனந்தன், அருண்லால், வருவாய் கோட்டாட்சியர்கள் ஈரோடு நர்மதாதேவி, கோபி கோவிந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.